Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சிறப்பு
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 10, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 27

ஒவ்வொரு குடும்பத்தின் தலையிலும் ரூ.2 லட்சத்து 63 ஆயிரத்து 976 கடன் உள்ளது தமிழக அரசின் நிதி நிலை குறித்து

நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வெள்ளை அறிக்கை

சென்னை ஆகஸ்ட் 10 2021: தமிழக அரசின் நிதி நிலை குறித்து நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் நேற்று வெள்ளை அறிக்கை வெளியிட்டார்.

தமிழக சட்டசபையில் வருகிற 13-ந்தேதி தி.மு.க. அரசின் முதல் பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது.

அதற்கு முன்னதாக கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் வருவாய் பற்றாக்குறை, வரி வருவாய் வீழ்ச்சி குறித்த தகவல்களை உங்களிடம் தெரிவிக்க இந்த அரசு கடமைப்பட்டுள்ளது. முதல்- அமைச்சரின் வழிகாட்டுதல்படி 3 மாதங்களாக உழைத்து இந்த அறிக்கையை தயாரித்து உள்ளோம்.

ஆந்திரா, பஞ்சாப் போன்ற மாநிலங்களின் பட்ஜெட் அறிக்கையை ஒப்பிட்டு பார்த்தும் 2001-ம் ஆண்டு நிதி அமைச்சர் பொன்னையன் தாக்கல் செய்த பட்ஜெட்டை பார்த்தும் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு உள்ளது.

ஆந்திரா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் பட்ஜெட் உரையை விட அ.தி.மு.க. அரசு தாக்கல் செய்த பட்ஜெட்டில் முழுமையான, தெளிவான விவரங்கள் இடம் பெறவில்லை.

தமிழக அரசு வெளிப்படை தன்மையுடன் செயல்படக்கூடியது என்பதை நிரூபிக்கும் வகையிலும், தேர்தல் அறிக்கையில் நாங்கள் கூறியபடியும் இந்த அறிக்கையை வெளியிட்டு இருக்கிறோம்.

பொதுவாக ஒரு அரசுக்கு அடிப்படை வருவாய் இல்லாமல் இருந்தாலும் குறிப்பிட்ட செலவினங்களை குறைக்க முடியாது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் போது வருவாய் பற்றாக்குறை தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது. ஜெயலலிதா முதல்- அமைச்சராக இருந்தபோது அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது ரூ.17 ஆயிரம் கோடி வருவாய் பற்றாக்குறை இருந்தது.

அவரது மறைவுக்கு பிறகு அடுத்த 5 ஆண்டில் ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் கோடியாக அதிகரித்து உள்ளது.

கொரோனா பரவல் காரணமாக இது போன்ற நிலை ஏற்பட்டது என்று கூறினாலும் மற்ற மாநிலங்களுக்கு இது போன்ற சரிவு ஏற்படவில்லை.

அ.தி.மு.க. ஆட்சியில் வருவாய்க்கு அதிகமாக திருப்பி செலுத்த முடியாத அளவுக்கு கடனை வாங்கி குவித்துள்ளனர். அதன்படி தற்போது தமிழக அரசுக்கு ரூ.5 லட்சத்து 70 ஆயிரம் கோடி பொதுக்கடன் வைத்துள்ளது.

அந்த வகையில் ஒவ்வொரு குடும்பத்தின் தலையிலும் ரூ.2 லட்சத்து 63 ஆயிரத்து 976 கடன் உள்ளது.

அதில் இருந்து தமிழகம் மீண்டு வருவதற்கான நடவடிக்கைகளை தொடங்கி உள்ளோம்.

வரி வருவாயை பொறுத்த வரையில் 4 வழிகளில் அரசுக்கு வருவாய் கிடைக்கின்றன. வரிகள் மூலம் ஈட்டப்படும் வருவாய், வரி இல்லாத வருவாய், 3-வதாக மத்திய அரசு மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கும் வரி வருவாய் ஆகும். 4-வதாக திட்டங்கள் மூலம் கிடைக்கும் வருவாய்.

இந்த 4 வழிகளிலும் கிடைக்கும் வருவாயை திரட்டுவதில் அ.தி.மு.க. அரசு வீழ்ச்சியை சந்தித்து வந்திருக்கிறது. குறிப்பாக கடந்த 15 ஆண்டுகளாக வாகன வரி உயர்த்தப்படாமலேயே உள்ளது. சொத்து வரிகளும் மாற்றி அமைக்கப்படவில்லை.

இது போன்ற அனைத்து துறைகளிலும் உரிய வரிகள் விதிக்கப்படவில்லை.

என்னை பொறுத்தவரை 'ஜீரோ' டேக்ஸ் என்பது அர்த்தம் இல்லாதது ஆகும். சரியான நபர்களிடம் இருந்து வரி வசூல் செய்ய வேண்டும்.

பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் இருப்பவர்களிடம் இருந்து தேவையான அளவுக்கு வரி வசூல் செய்தால் மட்டுமே அரசின் திட்டங்களை செயல்படுத்த முடியும். ஏழை, நடுத்தர மக்களுக்கு தேவையான நலத்திட்டங்களையும் செயல்படுத்த முடியும்.

சாமானிய மக்களிடம் வரி வசூல் செய்வதை விட பெரும் பணக்காரர்களிடம் வரி வசூல் செய்வது பல்வேறு நாடுகளிலும் உள்ளது.

குறிப்பாக அமெரிக்காவில் இது போன்று வரி வசூல் முறை வெற்றி பெற்றுள்ளது.

தமிழக மின் வாரியத்துக்கு மாநகராட்சி செலுத்த வேண்டிய மின் கட்டணங்கள் பல கோடி அளவுக்கு பாக்கி உள்ளது. கடந்த ஆட்சி காலத்தில் தமிழகத்தில் பல்வேறு மாநகராட்சி, பொதுத்துறை நிறுவனங்கள், மின்வாரியத்துக்கு பாக்கி வைத்துள்ளதால் புதிய மின்வாரிய பணிகளை தொடங்க முடியாத நிலை உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக அவசர செயற்குழு அமைச்சர் செஞ்சி கே. எஸ். மஸ்தான் பங்கேற்பு

திண்டிவனம், ஆக.10 2021: விழுப்புரம் வடக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக அவசர செயற்குழு ஆலோசனை கூட்டம் நடந்தது.

திண்டிவனத்தில் நடந்த அவசர செயற்குழு ஆலோசனை கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் நமச்சிவாயம் தலைமை தாங்கினார். மாவட்ட பொருளாளர் வீடு ரவி முன்னிலை வகித்தார். மாவட்ட துணைச் செயலாளர்கள் மலர்மன்னன், வசந்தா, ரவிக்குமார் ஆகியோர் வரவேற்புரை வழங்கினர். கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக தமிழக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் கலந்து கொண்டார். கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். சேதுநாதன் டாக்டர் ஆர். மாசிலாமணி, சீத்தாபதி சொக்கலிங்கம், செந்தமிழ் செல்வன், மாநில தீர்மான குழு செஞ்சி சிவா, மாநில செயற்குழு உறுப்பினர்கள் எல்.பி. நெடுஞ்செழியன், விஜயகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் என். ரமணன், தேன்மொழி நெடுஞ்செழியன், செல்வராஜ், நகர செயலாளர்கள் செஞ்சி காஜா நசீர், திண்டிவனம் கபிலன், ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், விஜயகுமார், எல்.பி. நெடுஞ்செழியன், சுப்பிரமணியன், சொக்கலிங்கம், கண்ணன், ராஜாராம், மணிமாறன், அண்ணாதுரை, துரை மற்றும் மாவட்ட அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் 2021ல் உள்ளாட்சி மன்ற தேர்தல் தொடர்பாகவும் முதல்வரின் 100 நாள் சாதனை தொடர்பாகவும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திண்டிவனம் ராமமூர்த்தி மறைவு காங்., தலைவர் நேரில் அஞ்சலி

திண்டிவனம், ஆக.10 2021: திண்டிவனத்தில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் திண்டிவனம் ராமமூர்த்தி உடலுக்கு காங்கிரஸ் தலைவர் உட்பட பலர் அஞ்சலி செலுத்தினர்.

தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர் திண்டிவனம் ராமமூர்த்தி நேற்று முன்தினம் காலை சென்னையில் காலமானார். அங்கு அவரது உடலுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர். பின்னர் உடல் அவரது சொந்த ஊரான விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் காவேரிப்பாக்கத்தில் உள்ள வீட்டிற்கு நேற்று முன்தினம் பிற்பகல் கொண்டு வரப்பட்டு, பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அவரது உடலுக்கு காங்கிரஸ் தலைவர் அழகிரி, அமைச்சர் கே.எஸ்.மஸ்தான், முன்னாள் எம்.எல்.ஏ.,க்கள் மாசிலாமணி, சேதுநாதன், முன்னாள் எம்.பி., வெங்கடேசன், விழுப்புரம் மாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் ஆர்.பி.ரமேஷ், குலாம் மொய்தீன், விநாயகம், கருணாகரன் உட்பட பலர் அஞ்சலி செலுத்தினர். அவரது உடல் நேற்று பிற்பகல் அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு நகராட்சி தகன மையத்திற்கு ஊர்வலமாக கொண்டு சென்று தகனம் செய்யப்பட்டது.

திமுகவில் இணைந்த மாகேந்திரனுக்கு தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளராக முக்கிய பதவி வழங்கிய மு.க.ஸ்டாலின்

கோவை, ஆகஸ்ட் 10 2021: மக்கள் நீதி மையம் கட்சியின் துணைத் தலைவராக செயல்பட்டவர் கோவையைச் சேர்ந்த மகேந்திரன். 2019ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் நீதி மையம் சார்பில் போட்டியிட்டு 1.50 லட்சம் வாக்குகள் பெற்றார். பின்னர், 2021 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் சிங்காநல்லூர் தொகுதியில் மக்கள் நீதி மையத்தின் சார்பில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். பின்னர் கமல்ஹாசனிடம் ஜனநாயகத் தன்மை இல்லை என்று கூறி கட்சியிலிருந்து வெளியேறிய மகேந்திரன் தனது ஆதரவாளர்களுடன் திமுகவில் தன்னை இணைத்துக் கொண்டார். இந்த நிலையில் மகேந்திரன் முன்பே திமுகவில் இணைந்திருந்தால் கொங்கு பகுதியில் திமுக வெற்றி பெற்றிருக்கும்' என்று திமுக தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு.க.

ஸ்டாலின் மனம் திறந்து பாராட்டினார். அப்போதே, மகேந்திரனுக்கு முக்கிய பதவி வழங்கப்படலாம் என பேச்சு எழுந்தது. மகேந்திரனுக்கு திமுகவின் ஐடி விங்-இல் முக்கிய பொறுப்பு கொடுக்கப்பட இருப்பதாக தகவல்கள் பரவியது. இந்நிலையில், தற்போது திமுக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளராக

ஆர்.மகேந்திரன் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக திமுக பொதுசெயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.

விவசாயிகள் விளைபொருட்களை மார்க்கெட்டுக்கு சுதந்திரமாக கொண்டு செல்வதற்கு அனுமதிக்க வேண்டும் மலை மாடுகளை மேய்ப்பதற்கு உரிமை வழங்க வேண்டும்

வருஷநாடு, ஆக 10 2021: இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கடமலை மயிலை ஒன்றியத்திற்கு உட்பட்ட விவசாயிகளுக்கு ஆதரவாக கோரிக்கை கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் தற்போது வருஷநாடு கிராமத்தில் நடைபெற்று வருகிறது. இந்த ஆர்ப்பாட்டத்தின் வாயிலாக மத்திய-மாநில அரசுக்கு விவசாயிகள் விவசாயம் செய்வதற்கு எந்த ஒரு இடையூறும் செய்யாமல் விளைபொருட்களை மார்க்கெட்டுக்கு கொண்டு செல்வதற்கு சுதந்திரமாக எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் மலை மாடுகளை மேய்ப்பதற்கு உரிமை வழங்க வேண்டும் எனவும்

வன உரிமைச் சட்டம் 2006 ன் படி வன நிலங்களை மறு பரிசீலனை செய்து தற்போது வரை விவசாயம் செய்து வரும் விவசாயிகளின் பெயரில் பட்டா வழங்க வேண்டும் என்றும் வனப் பகுதியில் குடியிருக்கும் பொது மக்களையும் விவசாயிகளையும் வனத்தை விட்டு வெளியேற்றும் 118 வனப் பாதுகாப்புச் சட்டத்தை நீக்கி விவசாய பொதுமக்களை பாதுகாக்கப்படவேண்டும் என்றும்

இக்கூட்டத்தின் வாயிலாக மத்திய-மாநில அரசுக்கு கோரிக்கை வைத்தனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை பொறுப்பேற்று தோழர் குணசேகரன் அவர்கள் முன்னிலை தோழர்கள் மணிகண்டன் இசைமணி மற்றும் சென்றாம் அவர்களும். சிறப்புரை ஆற்றுவதற்கு முன்னாள் எம்பி அழகிரிசாமி அவர்களும் மற்றும் பெருமாள் திருமலைகொழுந்து தங்கம் பரமேஸ்வரன் மற்றும் விவசாயிகள் அனைவரும் திரளாக கலந்துகொண்டு ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

மாளிகைப்பாறை கருப்பசாமி கோவிலுக்கு செல்லும் பக்தர்களை தடுத்து திருப்பி அனுப்பிய போலீசார்

தேனி, ஆக 10 2021: தேனி மாவட்டம் கடமலை மயிலை ஒன்றியத்தில் புகழ்பெற்ற கோவில்களில் மாளிகைப்பாறை கருப்பசாமி கோவில் உள்ளது இவ்வழியாக சதுரகிரி மகாலிங்கம் கோவிலுக்கு ஆடி அமாவாசை தினத்தன்று உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து பக்தர்கள் அதிகளவில் வருவதும் அவர்களது நேர்த்திக்கடனை செலுத்துவதும் வழக்கம் இந்த மாளிகை பாறை கருப்பசாமி கோவிலில் ஆடி அமாவாசை தினத்தன்று கலை நிகழ்ச்சிகளும் அருள் வாக்கும் அல்லு பணமும் அன்னதானமும் கோவில் நிர்வாகம் சார்பில் கொடுக்கப்படும் இந்த நாளில் அதிக அளவில் பக்தர்கள் வருவதால் கரோனா பரவலைத் தடுக்க அனைத்து கோயில்களும் அடைக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது இந்நிலையில் உப்புத்துறை யானை கஜம் அருகில் வனத்துறையினர் செக்போஸ்ட் அமைத்து கடும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர் மேலும் பக்தர்கள் கோயில் வரை வருவதால் கட்டுப்படுத்த முடியாத காரணத்தினால் கடமலைக்குண்டு காவல்துறையினர் கொம்பு காரன் புலியூர் வனத்துறை செக்போஸ்டில் வரும் வாகனங்களை தடுத்து நிறுத்தி பக்தர்களையும் திருப்பி அனுப்பி வருகின்றனர் இதனால் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு நகர தி.மு.க., வினர் அஞ்சலி

விக்கிரவாண்டி, ஆக 10 2021: விக்கிரவாண்டி பஸ்ஸ்டேண்டில் நகர தி.மு.க., சார்பில் நடந்த நினைவு அஞ்சலி நிகழ்ச்சிக்கு நகர செயலாளர் நைனாமுகமது தலைமை தாங்கி கருணாநிதி படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி அன்னதானம் வழங்கினார். முன்னாள் சேர்மன் அப்துல் சலாம், முன்னாள் துணை சேர்மன் சர்க்கார்பாபு, மாவட்ட துணை அமைப்பாளர்கள் பாபுஜீவானந்தம் , பாலாஜி, நகர தலைவர் தண்டபாணி, மாணவரணி

யுவராஜ், இளைஞரணி கார்த்திக், பிரசாத், சபிபுல்லா, நிர்வாகிகள் ராமசாமி, திலகர், சேகர், வேணுகோபால், இன்ஜினியர் சுரேஷ், செல்வகுமார், தேவராஜ் , பிச்சமுத்து உட்பட கட்சியினர் பலர் கலந்து கொண்டனர். விக்கிரவாண்டி நகர தி.மு.க., சார்பில் முன்னாள் முதல்வர் கருணாநிதி படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

கருணாநிதி படத்திற்கு தி.மு.க., வினர் நினைவு அஞ்சலி அ.தி.மு.க., வினர் எதிர்ப்பு தெரிவித்து வாக்குவாதம்

விக்கிரவாண்டி, ஆக 10 2021: விக்கிரவாண்டி கூட்டுறவு வங்கியில் முன்னாள் முதல்வர் கருணாநிதி படத்திற்கு தி.மு.க., வினர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதற்கு அ.தி.மு.க., வங்கி தலைவர் எதிர்ப்பு தெரிவித்ததால் இரு கட்சியினரிடையே கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

விக்கிரவாண்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் தலைவராக அ.தி.மு.க., வை சேர்ந்த பூர்ணராவ் உள்ளார். நேற்று கூட்டுறவு வங்கி அலுவலகத்தினுள் முன்னாள் முதல்வர் கருணாநிதி படத்திற்கு மாலை அணிவித்து தி.மு.க., வை சேர்ந்த அன்பழகன் என்பவர் தனது கட்சியினருடன் நினைவு அஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்ச்சி பற்றி தகவலறிந்த வங்கித் தலைவர் பூர்ணராவ், தனது கட்சியை சேர்ந்த வங்கி இயக்குனர்கள் பலராமன், துரைமுருகன், கண்ணன், செங்கல்வராயன், ரகுபதி, சங்கர் ஆகியோருடன் வங்கிக்கு வந்து முன்னாள் முதல்வர் கருணாநிதி படத்தை சுவற்றில் மாட்டிக் கொள்ளலாம் . ஆனால் நினைவு அஞ்சலி நிகழ்ச்சியை வங்கிக்கு வெளியில் வைத்து நடத்த வேண்டும். வங்கி அலுவலகத்தில் நினைவஞ்சலி செலுத்துவது அரசு விதிகளுக்கு புறம்பானது என வங்கி செயலாளர் மோகன்தாஸிடம் கூறி கருணாநிதி படத்தை அங்கிருந்து அப்புறப்படுத்தியதாக கூறப்படுகிறது.

இது பற்றி தகவலறிந்த தி.மு.க., மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாலாஜி தலைமையில் முன்னாள் கவுன்சிலர்கள் சுகுமார், தேவராஜ், நகர மாணவரணி யுவராஜ், இளைஞரணி பிரசாத், ராஜா, சங்கர் , நிர்வாகிகள் செல்வகுமார் ஆகியோருடன் வந்து அ.தி.மு.க., வங்கித்தலைவர் பூர்ணராவ் மற்றும் கட்சியினருடன் கடுமையான கார சார வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் வங்கி வளாகம் பரபரப்பாக காணப்பட்டது.

இறுதியில் முன்னாள் முதல்வர் கருணாநிதி படத்தை பழையபடி சுவற்றில் மாட்டி விட்டு தி.மு.க., வினர் புறப்பட்டு சென்றனர். வங்கி அலுவலகத்திற்குள் தி.மு.க., அ.தி.மு.க., வினர் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் சுமார் 45 நிமிடம் வங்கியில் பரபரப்பாக காணப்பட்டது.

விக்கிரவாண்டி கூட்டுறவு வங்கி அலுவலகத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதி படத்திற்கு அஞ்சலி செலுத்தியதிற்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க., வினரிடம் அ.தி.மு.க., வினர் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் காலையில் வெளிவரும்
ஹலோ மிரர் மெட்ராஸ் நாளிதழுக்கு
மாவட்டம், தாலுகா, பகுதி, நகர வாரியாக
அனுபவமுள்ள நிருபர்கள் தேவை
தொடர்புக்கு 8148231942
hellomadrasdaily@gmail.com

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

செவ்வாய்க்கிழமை,
ஆகஸ்ட் 10, 2021

பள்ளி மாணவர்களுக்கு கொரோனா விழிப்புணர்வு போட்டி

விக்கிரவாண்டி, ஆக 10 2021: விக்கிரவாண்டி பேரூராட்சி சார்பில் பள்ளி மாணவர்களுக்கு கொரோனா விழிப்புணர்வு போட்டி நடத்தி பரிசுகள் வழங்கும் விழா நடந்தது.

விக்கிரவாண்டி வெங்கடேஸ்வரா நகரில் நடந்த நிகழ்ச்சிக்கு பேரூராட்சி செயல் அலுவலர் அண்ணாதுரை தலைமை தாங்கி போட்டிகளை துவக்கி வைத்தார்.

பள்ளி மாணவர்களுக்கு கொரோனா விழிப்புணர்வு குறித்த ஓவியப் போட்டி, நாடகம், பேச்சுப் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை செயல் அலுவலர் அண்ணாதுரை வழங்கினார். பேரூராட்சி துப்புரவு ஆய்வாளர் விஸ்வநாதன், மேற்பார்வையாளர் ராமலிங்கம், பதிவறை எழுத்தர் சேகர் உள்ளிட்ட அலுவலர்கள் ,பொதுமக்கள் ,பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர். விக்கிரவாண்டி பேரூராட்சி செயல் அலுவலர் அண்ணாதுரை தலைமையில் மாணவர்களுக்கு கொரோனா விழிப்புணர்வு போட்டிகள் நடந்தது.

கொரோனா விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கல்

விக்கிரவாண்டி, ஆக 10 2021: விழுப்புரம் மாவட்ட போக்குவரத்து துறை சார்பில் கொரோனா விழிப்புணர்வு துண்டு பிரசுரம் பொதுமக்களிடம் வழங்கப்பட்டது.

விக்கிரவாண்டி பஸ்நிலையத்தில் விழுப்புரம் கோட்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் கொரோனா பரவலை தடுக்க விழிப்புணர்வு ஏற்படுத்த மேலாண்மை இயக்குனர் பொன்முடி உத்தரவின்பேரில், பொது மேலாளர் செல்வம் மேற்பார்வையில் ஓட்டுனர்கள் ஆய்வாளர் சீனிவாசன், அரசு பஸ் ஓட்டுனர்கள் பொதுமக்களுக்கு கொரோனா விழிப்புணர்வு துண்டு பிரசுரம் மற்றும் மாஸ்க் வழங்கப்பட்டது. தி.மு.க., நகர செயலாளர் நயினா முகமது, வேணுகோபால், லயன்ஸ் சங்க மாவட்ட தலைவர் ராஜாராம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகம், முண்டியம்பாக்கம் ஊராட்சி பகுதிகளில் கொரோனா விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தனர்.

விக்கிரவாண்டி பஸ்நிலையத்தில் போக்குவரத்து கழகம் சார்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது.

சிவகங்கை: சிவகங்கை சட்ட மாணவி பாலியல் வன்புணர்வு புகாரில், பாஜக சிவகங்கை நகர இளைஞரணி பொதுச் செயலாளர் பரத்லால் என்கிற லால் சரண் மீது வழக்கு பதிவு. லால் சரண் தலைமறைவு தலைவருக்கு மரியாதை நிமித்தமாக, லால் சால் அணிவித்த போது கிளிக்கிய புகைப்படம்.

விருதுநகர்: விருதுநகர் தெற்கு மாவட்ட திமுக செயலாளரும் வருவாய் துறை அமைச்சருமான கேகேஎஸ்எஸ் ராமச்சந்திரனின் பிறந்தநாளை முன்னிட்டு , விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை அருகே ஏழை எளிய மக்களுக்கு உணவு பொட்டலங்களை விருதுநகர் வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ராஜகுரு மற்றும் விருதுநகர் வடக்கு மாவட்ட திமுக வர்த்தக அணி துணை அமைப்பாளர் எல் திருமாறன் வழங்கினர்.

திருப்பூர்: அண்ணா புரட்சித்தலைவர் அம்மா திராவிட முன்னேற்ற கழக புதிய வடிவமைக்க பட்ட கொடியை கழக நிர்வாகிகள் வழங்கினார். அபுஅதிமுக பொது செயலாளர் டாக்டர் வி.செந்தில் குமார் வி.எஸ்.கே. பசி இல்லாத புதிய தமிழகம் உருவாக்குவோம் என உறுதி எடுத்து பின்பு கழக நிர்வாகிகளுடன் கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி. வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் சிறப்பாக பணியாற்ற கழக நிர்வாகிகளுக்கு சிறப்புரையாற்றினார் மேலும் இந்த நிகழ்ச்சியில். இதில் மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மயிலம் அருகே கார் - மொபெட் நேருக்கு நேர் மோதல் வாலிபரின் இரு கால்களில் முறிவு : தாடை எலும்புகள் நொறுங்கின

திண்டிவனம், ஆக.10 2021: மயிலம் அருகே கார். மொபெட் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில் வாலிபரின் இரு கால்களில் எலும்பு முறிவு ஏற்பட்டது. மேலும் அவரது தாடை எலும்புகள் நொறுங்கின. விழுப்புரம் மாவட்டம், மயிலம் அடுத்த கொல்லியங்குணம் பகுதியை சேர்ந்த ஓய்வு பெற்ற மின்துறை ஊழியரான விநாயகம் என்பவரின் மகன் அறிவழகன் (25). இவர் சென்னையில் ஒரு தனியார் கம்பெனியில் பணிபுரிந்து வருகிறார். இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு விடுமுறைக்காக தனது சொந்த ஊருக்கு வந்திருந்தார். ஞாயிற்றுக்கிழமை கூட்டேரிப்பட்டில் நடைபெறும் வாரச்சந்தையில் காய்கறி வாங்குவதற்காக தனது தந்தையின் மொபட்டில் கொல்லியங்குனத்திலிருந்து கூட்டேரிப்பட்டிற்கு சென்று கொண்டிருந்தார். அப்போது எடப்பாளையம் அருகே சென்னையிலிருந்து கொரலூருக்கு சென்று கொண்டிருந்த இண்டிகா காரும், மொபட்டும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. மொபட்டில் வந்த அறிவழகன் தூக்கி வீசப்பட்டதில் அவருக்கு இரு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது மேலும் தாடையின் எலும்புகள் நொறுங்கின. இதில் படுகாயமடைந்த அவரை சிகிச்சைக்காக திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேல் சிகிச்சைக்காக புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலும், இந்த விபத்து குறித்து மயிலம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கருங்குளம் வடக்கு ஒன்றிய டி.டி.வி.தினகரன் கட்சியை சேர்ந்த சுமார் 100 பேர்கள் முன்னாள் அமைச்சர் கடம்பூர் செ.ராஜூ முன்னிலையில் அதிமுகவில் இணைந்தனர்

தூத்துக்குடி ஆக 10 2021: டி.டி.வி.தினகரன் கட்சியை சேர்ந்த சுமார் 100 பேர்கள் கருங்குளம் வடக்கு ஒன்றிய செயலாளரும் கருங்குளம் ஒன்றிய துணை தலைவருமான லட்சுமண பெருமாள். சமீபத்தில் டிடிவி தினகரன் கட்சியின் மாநில மருத்துவ அணி இணை செயலாளராக இருந்து அதிலிருந்து விலகி அதிமுகவில் இணைந்த கருங்குளம் முன்னால் யூனியன் சேர்மன் கோசல்ராம் ஆகியோர் ஏற்பாட்டில் முன்னாள் அமைச்சரும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட அதிமுக செயலாளருமான கடம்பூர் செ.ராஜூ முன்னிலையில் கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் வைத்து டிடிவி தினகரன் கட்சியை சேர்ந்தவர்கள் அதிமுகவில் இணைந்தனர். இதில் முக்கியமாக டிடிவி தினகரன் கட்சியைச் சேர்ந்த கருங்குளம் வடக்கு ஒன்றியத்துக்குட்பட்ட ஊராட்சி கழக செயலாளர்கள். ராமசாமி. சின்னத்துரை. பாலகிருஷ்ணன். சேகர். ஒன்றிய இளைஞர் பாசறை செயலாளராக செயல்பட்டுவந்த இசக்கியம்மாள். ஒன்றிய இளைஞரணி செயலாளராக செயல்பட்டு வந்த விஜயன் கிளைக் அமுமக செயலாளர்களாக செயல்பட்டுவந்த சிவகுமார். துரைச்சாமி. சுடலைமுத்து. அரச முத்து. சுந்தர்ராஜ். பத்திரன். மூர்த்தி. குமார். உட்பட சுமார் 100 பேர்கள் டிடிவி தினகரன் கட்சியில் இருந்து விலகி அதிமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சியில் கோவில்பட்டி ஒன்றிய துணைத் தலைவர் பழனிச்சாமி. கோவில்பட்டி நகர செயலாளர் விஜய பாண்டியன். மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி இணைச் செயலாளர் போடு சாமி. மாவட்ட வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளர் கூட்டுறவு வீட்டுவசதி சங்க தலைவர் ராஜேந்திரன். கோவில்பட்டி நகர அம்மா பேரவை செயலாளர் ஆபிரகாம் ஐயாத்துரை. வழக்கறிஞர் சிவபெருமாள். ஈஸ்வரமூர்த்தி. கோவில்பட்டி நகர எம்ஜிஆர் இளைஞர் அணி இனை செயலாளர் ஜெமினி. ஜெயந்தி சரவணன்சாமி. அமுமக பேச்சாளர் பெருமாள்சாமி. முன்னாள் கவுன்சிலர் பாலமுருகன். உட்பட ஏராளமான கழகத்தினர்கள் இன்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கள்ளிமந்தயம் ஊராட்சியில் கலைஞர் கருணாநிதி 3-ம் ஆண்டு நினைவு நாள் அனுசரிப்பு நடைபெற்றது

ஒட்டன்சத்திரம், ஆகஸ்ட் 10 2021: திண்டுக்கல் மாவட்டம் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கள்ளிமந்தயம் ஊராட்சியில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 3-ம் ஆண்டு நினைவு நாள் அனுசரிப்பு நடந்தது. கலைஞர் கருணாநிதி, கடந்த 2018 ஆகஸ்ட் 7-ம் தேதி காலமானார். முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியின் 3-ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கருணாநிதியின் உருவப்படத்துக்கு திமுக-வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். கரோனா 3-வது அலைபரவல் எச்சரிக்கை காரணமாகவும், கரோனா தொற்று மெல்ல மெல்ல அதிகரித்து வருவதாலும் பெரிய அளவிலான நிகழ்ச்சிகளைத் தவிர்த்து அவரவர் வீடுகள் முன்பு கருணாநிதி படம் வைத்து அஞ்சலி செலுத்துமாறு நிர்வாகிகள், தொண்டர்களுக்கு கட்சித் தலைவரும், முதல்வருமான ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதனடிப்படையில் உணவு மற்றும் உணவு பொருள் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களின் ஆலோசனையின்படி கள்ளிமந்தயம் ஊராட்சியில் கலைஞர் கருணாநிதி அவர்களின் நினைவுதினம் அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கள்ளிமந்தயம் ஊராட்சி மன்ற தலைவர் எம்.கணேசன், கிளைக் கழகச் செயலாளர் கோதண்டராமன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தி.ஆனந்தராஜ், தொப்பம்பட்டி ஒன்றிய துணைச் செயலாளர் ஜே.பி.செல்வராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மணமக்களுக்கு மலர்களில் முகக் கவசம் - மதுரை பூக்கடைக்காரரின் புதுமையான முயற்சி

திருப்பூர் ஆகஸ்ட் 10 2021: மின்சார வாரிய தொமுச சார்பில் திமுகழக தலைவர் டாக்டர் கலைஞரின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளையொட்டி திருப்பூர் மாநகரம் பி. என் ரோடு போயம்பாளையம் ஆர். கே நகர் மின்சார வாரிய பிரிவு அலுவலகம் அருகில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்ச்சி தொமுச செயலாளர் ஈ. பி. அ. சரவணன் தலைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்ட தொமுச பேரவை கவுன்சில் துணை தலைவர் ஆர்.ரெங்கசாமி, ஆர் கே நகர் மின்சார வாரிய ஜோதிபாசு, தமிழ், பாண்டியன் நகர் செல்வம், தொமுச நிர்வாகிகள் மின்சார வாரிய தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூர் மின்சார வாரிய துணை மின் நிலையம் அருகில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்ச்சியில் தொமுச கவுன்சில் துணை தலைவர் ஆர். ரெங்கசாமி, செயலாளர் ஈ. பி. அ .சரவணன், ஈ.பி. செந்தில் (எ) பழனிச்சாமி, ஈ.பி. விஜயன், பூபதிராஜா , ரவி, அய்யாசாமி, விஸ்வநாதன், விஜய் மற்றும் மின்சார வாரிய தொழிலாளர்கள் , தொமுச நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து திருப்பூர் மேட்டுப்பாளையம் பஸ் நிறுத்தம் அருகிலுள்ள மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் அலுவலகம், குமார் நகர் மின்வாரிய துணை மின் நிலையம், திருப்பூர் மின்வாரிய கோட்ட அலுவலகம், அனுப்பர்பாளையம் மின்வாரிய பிரிவு அலுவலகம், வேலம்பாளையம் துணை மின் நிலையம், பாண்டியன் நகர் மின்வாரிய பிரிவு அலுவலகம், வாவிபாளையம் பூலுவப்பட்டி மின்வாரிய பிரிவு அலுவலகம், பெருமாநல்லூர் மின்வாரிய பிரிவு அலுவலகம், மின்வாரிய கோட்ட அலுவலகம் உட்பட திருப்பூர் மாவட்ட பகுதிகளில் 15 க்கும் மேற்பட்ட இடங்களில் மின்சார வாரிய தொமுச சார்பில் தலைவர் டாக்டர் கலைஞரின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சங்கத்தின் செயலாளர் ஈ.பி. அ .சரவணன் செய்திருந்தார். இந்த நிகழ்ச்சியில் தொமுச நிர்வாகிகள், மின்சார வாரிய தொழிலாளர்கள் கலந்து கொண்டு தலைவர் டாக்டர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

மரக்காணம் அருகே சொகுசு காரை சேதப்படுத்திய மர்ம ஆசாமிகளுக்கு போலீஸ் வலை

மரக்காணம், ஆக 10 2021: விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் சால்ட் ரோடு பகுதியை சேர்ந்தவர் வெங்கடேஷ். இவர் செட்டி நகர் பகுதியில் உள்ள ஒரு இறால் பண்ணையில் நிர்வாக இயக்குனராக வேலை செய்து வருகிறார். இவர் வழக்கம் போல தனது பணியை முடித்து விட்டு இரவு வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த போது வீட்டின் வெளியே நிறுத்தப்பட்டிருந்த அவருக்கு சொந்தமான 2 சொகுசு கார்களை இரண்டு சக்கர வாகனத்தில் வந்த 4 பேர் கொண்ட கும்பல் அவரது சேதப்படுத்தினர். சத்தம் கேட்டு வந்த வெங்கடேஷ் வெளியில் வந்தவுடன் மர்ம நபர்கள் அங்கிருந்து தப்பி ஓடினர். இது குறித்து வெங்கடேஷ் அளித்த புகாரின்பேரில் மரக்காணம் போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் முன்விரோத தகராறில் இந்த சம்பவம் நடந்ததா? இல்லை வேறு ஏதேனும் பகை உள்ளதா? என்ற கோணத்தில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

போச்சம்பள்ளி அருகே தமிழ்நாடு சமூக சேவகர் கூட்டமைப்பு கூட்டம் என்ஜிஓ அமைப்புக்கு தனி நலவாரியம் அமைக்க கோரிக்கை

கிருஷ்ணகிரி, ஆக 10 2021: கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி, அடுத்த புலியூர் கிராமத்தில் தமிழ்நாடு சமூக சேவகர் கூட்டமைப்பின் சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது, கூட்டத்திற்கு மாநில தலைவர் ஜான்பீட்டர் தலைமை தாங்கினார், ஆலோசனை கூட்டத்தில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மண்டல மாவட்டங்களை சார்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனங்களை சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர், கூட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சமூக சேவகர்களையும் ஒன்றிணைத்து தமிழகரசு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் என்ஜிஓ வாரியம் அமைக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, தமிழக அரசு நல வாரியம் அமைக்க அனைவரும் ஒத்துழைத்து செயல்பட வேண்டும் என கூட்டத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது, இதில் மாநில ஒருங்கிணைப்பாளர் முருகம்மாள், மாநில பொருளாளர் மாரியப்பன், மாவட்ட தலைவர் ஆதிமூலம், பச்சையம்மாள் அறக்கட்டளை தலைவர் அருள்மனி, சன் தொண்டு நிறுவன திம்மராஜி, ரவி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் தருமபுரி மாவட்ட சமூக சேவகர்கள் 150 க்கும் மேற்பட்டவர்கள் இந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மன்னார்சாமி சமேத பச்சையம்மன் ஆலயத்தின் அவல நிலை அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

திருவண்ணாமலை, ஆக 10 2021: திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் தாலுக்கா காம்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இயங்கி வரும் ஸ்ரீ மன்னார்சாமி சமேத பச்சையம்மன் ஆலயத்தின் அவல நிலை சுமார் நூறு ஆண்டுகள் கிராம மக்களின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த பச்சையம்மன் ஆலயத்தை கிராம மக்கள் பல்வேறு பொது மக்களிடம் நன்கொடையாக பணம் மற்றும் பொருட்களை பெற்று இக்கோயிலை பல வருடங்களாக கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சி அடைய செய்து இக்கோயிலுக்கு குலதெய்வம் என்று கூறி வெளியூர்களில் இருந்தும் வெளிமாநிலங்களில் இருந்தும் வரும் பக்தர்களுக்கு தேவையான அனைத்து விதமான அடிப்படை வசதிகளையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி செய்துவந்தனர் ஆனால் சுமார் 15 ஆண்டுகளாக இந்து அறநிலையத்துறை நிர்வாகத்தின் கீழ் இக்கோயில் சென்ற பிறகு இன்று தேதி வரை இக்கோயிலுக்கு கழிவறைகள் குளியலறைகள் மொட்டை அடிக்கும் இடம் குடிநீர் வசதி போன்ற எந்த அத்தியாவசிய வேலைகளையும் செய்யாமல் இக்கோயிலில் வரும் அனைத்து வரிகளையும் இந்து அறநிலைத்துறை எடுத்துச் சென்றுள்ளது குறிப்பாக ஒவ்வொரு ஆடி மாதமும் இக்கோயிலுக்கு கர்நாடகா ஆந்திரா போன்ற வெளி மாநிலங்களில் இருந்தும் தமிழ்நாடு வெளி மாவட்டம் மற்றும் உள் மாவட்டங்களில் பல கிராமங்களிலிருந்து குலதெய்வ பொங்கலிட்டு பூஜை செய்ய இக்கோயிலுக்கு வருகின்றனர் அப்படி வெளியூரிலிருந்து வரும் குறிப்பாக பெண் பக்தர்களுக்கு பாதுகாப்பான கழிவறை மற்றும் குளியலறை உடைமாற்றும் அறை மற்றும் தீர்த்த குளங்களை சுத்தம் செய்து குப்பைகளை அகற்றி பொதுமக்கள் தீர்த்த நீராடுவதற்கு ஏதுவான வகையில் தீர்த்த குளங்களை பராமரிப்பது இல்லை இது போன்ற எந்த வசதிகளையும் இதுவரை இந்த 15 ஆண்டுகளில் இந்து அறநிலையத்துறை செய்யவில்லை ஆனால் ஒவ்வொரு ஆண்டும் இக்கோயிலில் வரும் வருவாய்களை அறநிலையத்துறை மட்டுமே கொண்டு செல்கிறது இக்கோயிலில் பணியமர்த்தப்பட்டுள்ள ஊழியர்கள் எங்களுக்கு தெரிந்த வகையில் வேலைக்கு வராமலே சம்பளம் பெறுகின்றனர் மற்றும் கோயில் அலுவலகம் எப்பொழுதுமே பூட்டி வைக்கப்பட்டுள்ளது இது மட்டுமில்லாமல் பாரம்பரிய திருவிழாக்கள் எதையும் நடத்தவில்லை அப்படி நடத்தியதாக பொய்யான கணக்குகளை கூறி பல லட்ச ரூபாய் நிர்வாகம் மோசடி செய்துள்ளதாக கிராம பொதுமக்கள் தெரிவிக்கின்றனர் இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டுவரும் இந்து அறநிலையத்துறை அதிகாரிகள் பத்திரிக்கை வாயிலாக வரும் செய்திகளை பார்த்து உடனடியாக நடவடிக்கை எடுத்து பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் கோரிக்கையை ஏற்று இக்கோயிலுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் உடனடியாக செய்ய வேண்டும் அப்படி ஒரு நிர்வாகத்தினால் செய்ய முடியவில்லை என்றால் மீண்டும் இக்கோயிலை காம்பட்டு கிராம பொது மக்களிடம் ஒப்படைத்து விட்டாள் இக்கிராம மக்கள் ஒரு குழுவை உருவாக்கி அக்குழுவின் மூலம் வருகின்ற பக்தர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தர கிராம பொதுமக்கள் தயாராக உள்ளனர் காம்பட்டு கிராம மக்களினால் ஒவ்வொரு ஆடி மாதத்தில் உள்ள ஒரு வெள்ளிக்கிழமை ஊர் பொங்கலிட்டு அம்மனுக்கு அபிஷேகம் சிறப்பு ஆராதனை செய்து உற்சவரை ஊர்வலமாக எடுத்துச்சென்று காம்பட்டு கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் அம்மன் அருளாசி வழங்க ஏற்பாடு செய்துவந்தனர் இதுபோன்ற பாரம்பரிய திருவிழாக்கள் ஒரு நாளும் அறநிலையத் துறை மூலமாக நடத்தியது கிடையாது எனவே இதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் இக்கோயிலை சுகாதாரத்துறை அதிகாரிகள் பார்வையிட்டு சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது என்பதை கண்காணிக்க வேண்டும்.

வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரனுக்கு, அமைச்சர் தங்கம்தென்னரசு நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து

விருதுநகர், ஆக 10 2021: தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், வருவாய்த்துறை அமைச்சருமான கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தனது பிறந்த நாளையொட்டி கேக் வெட்டிக் கொண்டாடினார்.

அவருக்கு, விருதுநகர் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் தொழில்துறை அமைச்சருமான தங்கம்தென்னரசு நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். அமைச்சர்

தங்கம் தென்னரசு தனது முகநூல் பக்கத்தில் , பிறந்தநாள் வாழ்த்து செய்தியை பதிவிட்டுள்ளார். அப்பதிவில், கால் நூற்றாண்டு காலமாக இயக்கத்தை விருதுநகர் மாவட்டத்தில் கட்டிக்காத்துத் தொண்டர்களையும், நிர்வாகிகளையும் அரவணைத்துச் சென்று, கழகத் தலைவர் அவர்களின் உற்ற நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் அண்ணாச்சி அவர்கள். இன்று போல் என்றும் புகழ் பொலிந்து வாழ்க என வாழ்த்துவதில் பேருவுவகையும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

திண்டிவனம்: விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் காவேரிப்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவரும், ராஜ்யசபா முன்னாள் உறுப்பினருமான, திண்டிவனம் கே.இராமமூர்த்தியின் மறைவையொட்டி அவரது வீட்டிற்கு நேரில் வருகை தந்த தமிழக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தேனி: தேனிமாவட்டம் ஆண்டிபட்டி பத்திரப்பதிவு அலுவலகத்திற்க்கு அருகே தனியாருக்கு சொந்தமான பழைய பஞ்சு குடோனில் பயங்கர தீ யை தீயனைப்புதுறையினர் மிகுந்த சிறமப்பட்டு தீயை அனைத்து உயிர்ச்சேதம் ஏற்படாவன்னம் தீயை அனைத்தனர் இந்த தீ விபத்து சம்மந்தமாக ஆண்டிபட்டி காவல் துறை அதிகாரி அவர்கள் விசாரித்து வருகின்றனர்.

விருதுநகர்: முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதியின் நினைவு தினத்தில், அவரது திருவுருவப்படத்திற்கு விருதுநகர் வடக்கு மாவட்ட திமுக வர்த்தக அணி துணை அமைப்பாளர் எல்.திருமாறன் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். உடன், திமுக நிர்வாகிகள்.

சார்பு ஆட்சியர் அலுவலகம்
பெரியகுளம்

ந.க. எண். 1933/2021-அ-7

ராமசாமி
த/பெ.கந்தசாமி நாயக்கர்,
காளியம்மன் கோவில் தெரு,
கோத்தலூத்து, ஆண்டிப்பட்டி வட்டம்,
தேனி மாவட்டம். --- மனுதாரர் / வாதி

V/S

சார்பு ஆட்சியர் அவர்கள்
சார்பு ஆட்சியர் அலுவலகம்
பெரியகுளம். --- எதிர்மனுதாரர் / பிரதிவாதி

அறிவிப்பு

மனுதாரர் தனது தந்தை கந்தசாமி நாயக்கர் என்பவர் கடந்த 05.01.1999-ம் தேதியில் மேற்படி முகவரியில் இறந்ததை மேற்படி 25.01.1999 எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய உத்தரவு கோரி மனுதாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவின் பேரில் எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் 15-தினங்களுக்குள் மேற்படி சார்பு ஆட்சியரிடம் நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் ஒருதலை பட்சமாக மனு தீர்மானிக்கப்படும்.

கந்தசாமி நாயக்கர் இறப்பு - 25.01.1999

மனுதாரர்

க.ராமசாமி

சார்பு ஆட்சியர் அலுவலகம்
பெரியகுளம்

ந.க. எண். 1932/2021-அ-7

ராமசாமி
த/பெ.கந்தசாமி நாயக்கர்,
காளியம்மன் கோவில் தெரு,
கோத்தலூத்து, ஆண்டிப்பட்டி வட்டம்,
தேனி மாவட்டம். --- மனுதாரர் / வாதி

V/S

சார்பு ஆட்சியர் அவர்கள்
சார்பு ஆட்சியர் அலுவலகம்
பெரியகுளம். --- எதிர்மனுதாரர் / பிரதிவாதி

அறிவிப்பு

மனுதாரர் தனது தாய் காளியம்மாள் என்பவர் கடந்த 10.04.2016-ம் தேதி மேற்படி முகவரியில் இறந்ததை மேற்படி மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய உத்தரவு கோரி மனுதாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவின் பேரில் எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் 15-தினங்களுக்குள் மேற்படி சார்பு ஆட்சியரிடம் நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் ஒருதலை பட்சமாக மனு தீர்மானிக்கப்படும்.

காளியம்மாள் இறப்பு - 10.04.2016

மனுதாரர்

க.ராமசாமி

மரக்காணம் அருகே டிராக்டரில் மணல் கடத்தல் தப்பியோடிய கும்பலுக்கு போலீஸ் வலை

மரக்காணம், ஆக.10 2021: விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அடுத்த செய்யாங்குப்பம் மற்றும் கைபானி கிராமம் அருகே டிராக்டரில் மணல் கடத்துவதாக மரக்காணம் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது தகவலின் அடிப்படையில் மரக்காணம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர்.

அப்பொழுது டிராக்டரில் மணல் கடத்தியது தெரிய வந்தது. போலீசாரை கண்ட மணல் கடத்தல் கும்பல் தப்பி ஓடினர். இது குறித்து வழக்கு பதிவு செய்து இரண்டு டிராக்டரை பறிமுதல் செய்தனர், மேலும் தப்பி ஓடிய நபர்களை போலீசார் தேடி வருகின்றனர்.

மரக்காணம் அருகே அழுகிய நிலையில் கடலில் கரை ஒதுங்கிய ஆண் சடலம்

மரக்காணம், ஆக.10 2021: புதுச்சேரி வம்பாகீரபாளையம் பகுதியை சேர்ந்தவர் சூரியபிரகாஷ் (25). இவர் கடந்த 5 ஆம் தேதி தனது நண்பர்களுடன் புதுச்சேரி பகுதியில் உள்ள கடற்கரை பகுதியில் குளித்து கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராதவிதமாக ராட்ச அலையில் சிக்கி உடல் உள்ளே இழுத்து சென்றது. அவரது நண்பர்கள் சூரியபிரகாஷை எங்கு தேடியும் கிடைக்கவில்லை. இந்நிலையில் நேற்று முன்தினம் மரக்காணம் அடுத்த எக்கியார்குப்பம் அருகே அவரது உடல் அழுகிய நிலையில் கரை ஒதுங்கியது. இது குறித்து மரக்காணம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

வால்பாறையில் உலக தாய்ப்பால் வார விழா

கோவைம், ஆக 10 2021: கோவை மாவட்டம் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் ஆலோசனைக்கு இணங்க உலக தாய்ப்பால் வாரம் கடைபிடிக்கப்பட்டது இதில் வால்பாறை வட்டாரத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள அங்கன்வாடிகளில் அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள் சார்பாக தாய்ப்பால் வார விழா மற்றும் கண்காட்சி மற்றும் போட்டிகள் நடைபெற்றது முன்னதாக இந்நிகழ்ச்சியை வால்பாறை குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் ரா.சாந்தி குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் பொது மக்கள் என அனைவரும் கலந்து கொண்ட நிகழ்சியில் தாய்ப்பால் பற்றி விழிப்புணர்வு மற்றும் முக்கியத்துவம் பற்றி விளக்கவுரை அளிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான கோவிட் தடுப்பூசி பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தபட்டது. விழாமுடிவில் வளரிளம் பெண்களுக்களான வினாடி வினா போட்டி நடைபெற்று அதற்கான பரிசு பொருட்களும் வழங்கப்பட்டது. குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் ரா.சாந்தி முன்னிலையில் திட்ட ஒருங்கிணைப்பாளர் ம.அனிஷ் குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கர்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளர் இளம் பெண்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்து முன்னணி நிர்வாகி சசிக்குமார் கொலை வழக்கு 5-வது குற்றவாளி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல்

கோவை, 10 2021:

கோவை இந்து முன்னணி நிர்வாகி சசிகுமார் கொலை வழக்கு தொடர்பாக 5-வது குற்றவாளி மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. கோவையில் இந்து முன்னணியின் மாவட்ட செய்தி தொடர்பாளர் ஆக பணிபுரிந்து வந்தவர் சசிகுமார். கடந்த 2016-ம் ஆண்டில் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் தொடர்புடைய முக்கிய குற்றவாளியான முகமது ரஃபிக் ஹாசன் ஓமனில் தலைமறைவாக இருந்தார். கடந்த பிப்ரவரி மாதம் ஓமனில் இருந்து டெல்லிக்கு வந்த முகமது ரஃபிக் ஹாஸனை தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் கைது செய்தனர். பூந்தமல்லியில் உள்ள தேசிய புலனாய்வு சிறப்பு கோர்ட்டில் அவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. எனவே இந்த வழக்கில் ஏற்கனவே கைதான 4பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்தநிலையில் 5-வதாக கைதான முகமது ரஃபிக் ஹசன் மீது தற்போது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சேலத்தில் இருந்து கோவை கலெக்டருக்கு செல்போனில் மிரட்டல் பழைய பேப்பர் கடைக்காரரிடம் போலீசார் விசாரணை

கோவை, ஆக 10 2021: கோவை மாவட்ட கலெக்டராக பணியாற்றி வருபவர் சமீரன். நேற்று முன்தினம் இவருடைய செல்போன் எண்ணை தொடர்பு கொண்டு மர்ம நபர் ஒருவர் பேசினார். அப்போது அவர் கலெக்டருக்கு மிரட்டல் விடுக்கும் வகையில் பேசியதாக கூறப்படுகிறது. இதுகுறித்து உடனடியாக கோவை போலீசாருக்கு தெரிவிக்கப்பட்டது. அதன்பேரின் போலீசார் நடத்திய விசாரணையில் கலெக்டருக்கு சேலத்தில் இருந்து மர்ம நபர் பேசியது தெரியவந்தது.

இதையடுத்து சேலம் சைபர் கிரைம் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் சைபர் கிரைம் போலீசார் தீவிரமாக விசாரித்தனர். மேலும் செல்போன் எண்ணை கொண்டு அதன் உரிமையாளரை கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அப்போது அந்த எண், சேலம் இரும்பாலை அருகே உள்ள பழைய பேப்பர் கடைக்காரர் ஒருவருடையது என்பது தெரியவந்தது. இதையடுத்து அவரிடம் போலீசார் விசாரணை நடத்தினர்.

போலீசாரிடம் அவர், கடந்த சில நாட்களுக்கு முன்பு தனது செல்போன் திருட்டு போனதாகவும், விலை குறைந்த செல்போன் என்பதால் போலீசில் புகார் அளிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இதனிடையே கோவை கலெக்டருக்கு மிரட்டல் விடுத்த நபர், சென்னை தலைமைச் செயலகம், கேரள மாநில தலைமைச் செயலகம் ஆகியவற்றுக்கும் போன் செய்து அரை மணி நேரத்துக்குள் வெடிகுண்டு வெடிக்கும் என்று மிரட்டியதும் போலீசாரின் மேல் விசாரணையில் தெரியவந்தது. தற்போது அந்த மர்ம நபர் செல்போனை சுவிட்ச் ஆப் செய்து உள்ளார். செல்போனை திருடி பல்வேறு இடங்களுக்கு பேசி மிரட்டல் விடுத்த மர்ம நபர் யார்?, எந்த ஊரை சேர்ந்தவர்? என்பது குறித்து போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். மர்ம நபருக்கு கோவை கலெக்டர், தமிழகம் மற்றும் கேரளாவில் உள்ள தலைமை செயலகத்தின் செல்போன் எண்கள் எப்படி கிடைத்தது?, எதற்காக மிரட்டல் விடுத்தார்? என பல்வேறு கோணங்களில் போலீசார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர். இந்த சம்பவத்தால் சேலத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அலங்காநல்லூர் அருகே ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவுகள் - எம்.எல்.ஏ வெங்கடேசன் வழங்கினார்

அலங்காநல்லூர், ஆக 10 2021: மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் தமிழக முன்னாள் முதல்வரும், திமுக தலைவருமான கலைஞர் மு.கருணாநிதி 3ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி சந்தைமேடு திடலில் அவரது உருவப்படத்திற்கு சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் மாலை அணிவித்து மரியாதை செய்தார். தொடர்ந்து எர்ரம்பட்டி அருகே உள்ள குழந்தைகள் காப்பகத்தில் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் ரேணுகாஈஸ்வரி கோவிந்தராஜ் ஏற்பாட்டில் ஆதரவற்ற குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் கென்னடி கண்ணன், பரந்தாமன், செயற்குழு உறுப்பினர் தன்ராஜ், நகர செயலாளர் ராஜேந்திரன், விவசாய அணி நடராஜன், நிர்வாகிகள் ரகுபதி, சுவாமிநாதன், ஊராட்சி மன்ற தலைவர் சுந்தரராஜன், உட்பட பலர் பங்கேற்றனர். முன்னதாக அங்குள்ள காப்பக குழந்தைகளுக்கு எம்.எல்.ஏ வெங்கடேசன் போர்வை வழங்கினார். பின்னர் அங்குள்ள வளாகத்தில் மரக்கன்று நடப்பட்டது.

கோர்ட் உத்திரவின் படி சிறுவள்ளிக்குப்பத்தில் ஆக்கிரமிப்புகள் அகற்றம்

விக்கிரவாண்டி, ஆக 10 2021: விக்கிரவாண்டி அடுத்த சிறுவள்ளிக்குப்பத்தில் நீதிமன்ற உத்திரவு படி பலத்த போலீஸ் பாதுகாப்புடன் அதிகாரிகள் ஆக்கிரமிப்பை அகற்றினர்.

விக்கிரவாண்டி அடுத்த சிறுவள்ளிக்குப்பம் கிராமத்தில் மந்தைவெளி புறம்போக்கு பகுதியில் ஆக்கிரமிப்புகள் இருப்பதாக அதே கிராமத்தை சேர்ந்த துரைராஜ் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் பொது நலவழக்கை கடந்த 2019ம் ஆண்டு தொடர்ந்தார். ஆக்கிரமிப்புகளை அகற்ற நீதிமன்றம் உத்திரவிட்டும், ஆக்கிரமிப்புகள் அகற்றாததால் மீண்டும் துரைராஜ் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்ததின் பேரில் நேற்று காலை சிறுவள்ளிக்குப்பம் கிராமத்தில் இருந்த ஆக்கிரமிப்புகளை தாசில்தார் தமிழ்செல்வி தலைமையில் மண்டல துணை தாசில்தார் செல்வமூர்த்தி, தலைமை சர்வேயர் சுரேஷ், சர்வேயர் கலா, பி.டி.ஓ.,க்கள் நாராயணன், குலோத்துங்கன், போலீஸ் இன்ஸ்பெக்டர் வினாயகமுருகன்,

சப்-இன்ஸ்பெக்டர் பரணிநாதன் ,தனிப்பிரிவு சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் சங்கர வடிவேல், வருவாய் ஆய்வாளர் ராஜேஷ், வி.ஏ.ஓ., மகிழ்னன் ஆகியோர் கொண்ட குழுவினர் மந்தைவெளி புறம்போக்கு பகுதியிலிருந்த ஆக்கிரமிப்புகளை ஜே.சி.பி., மூலம் இடித்து அப்புறப்படுத்தினர். இதனால் அப்பகுதியில் வசித்த பொதுமக்களிடம் பரபரப்பு ஏற்பட்டது. புறம்போக்கு பகுதியில் குடியிருந்த தகுதியுள்ள 5 பேருக்கு மாற்று இடத்தில் பட்டா மனை வழங்கப்பட்டது. விக்கிரவாண்டி அடுத்த சிறுவள்ளிக்குப்பத்தில் கோர்ட் உத்திரவு படி ஆக்கிரமிப்புகள் இடித்து அகற்றப்பட்டது.

வேப்பூர் அருகே அழுகிய நிலையில் நிர்வாணமாக 55 வயது ஆண் சடலம் மீட்பு கொலையா என்று போலீசார் விசாரணை

வேப்பூர் ஆக 10 2021: கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகிலுள்ள சேப்பாக்கம் கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கு சொந்தமான நிலத்தில் முகவரி தெரியாத ஆண் சடலம் அழுகிய நிலையில் நிர்வாணமாக கிடப்பதாக சேப்பாக்கம் கிராம நிர்வாக அலுவலர் கலையரசனுக்கு தகவல் கிடைத்தது. தகவலின்பேரில் நேரில் சென்று பார்த்த விஏஓ, கலையரசன், வேப்பூர் காவல் நிலையத்திற்கு அழுகிய ஆண் சடலம் கிடப்பதாக புகார் அளித்தார். அதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த இன்ஸ்பெக்டர் ரமேஷ்பாபு , சப் இன்ஸ்பெக்டர்கள் ரவிச்சந்திரன், கிருஷ்ணமூர்த்தி, சந்திரா ,தனிப்பிரிவு காவலர் ராஜேஷ் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து பிரேதத்தை பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்காக விருத்தாசலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

காட்டுப் பகுதியில் அடையாளம் தெரியாத ஆண் சடலம் அழுகிய நிலையில் நிர்வாணமாக கண்டெடுக்கபட்ட உடலில் கை விரல் நகங்கள், தலை முடி ஆகியவை நீளமாக இருப்பதாலும், உடலில் காயம் ஏதும் இல்லாததாலும் பிச்சை எடுப்பவராக இருக்கலாமா அல்லது கொலையா என போலீசார் பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.

தன்னுடைய சொந்த செலவில் தடுப்பூசி, உணவு, பெட்டி கடை, உதவி தொகை வழங்கிய சிங்காநல்லூர் அதிமுக எம்எல்ஏ கே.ஆர் ஜெயராம்

கோவை, ஆக 10 2021: கோவை சிங்காநல்லூர் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் கே.ஆர்.ஜெயராம் தன்னுடைய சொந்த செலவில் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மக்களுக்கு நிவாரணம் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை செய்து வருகிறார். கோவை வரதராஜபுரம் பகுதியில் உள்ள பார்வையற்றோர் அலுவலகத்தில் பார்வையற்ற 150 பேருக்கு சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் இலவச தடுப்பூசி போடப்பட்டது. தொடர்ந்து பார்வையற்றவர்களுக்கு மதிய உணவுகளையும் வழங்கினார். இதனை தொடர்ந்து கொரோனாவினால் தங்களது வாழ்வாதாரம் இழந்து தவித்த சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு பெட்டி கடைகள் வைத்து கொடுத்தார். தொடர்ந்து அப்பகுதியை சேர்ந்த 5 ஏழை கல்லூரி மாணவர்களுக்கு ரூபாய் 5 ஆயிரம் வீதம் 25 ஆயிரம் ரூபாய் உதவி தொகையை வழங்கினார்.

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 3-ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தி.மு.கவினர் தங்கள் வீடுகள் முன் அவரது படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்கின்றனர்.

கோவை, ஆக 10 2021: போத்தனூர் சாரதாமில் சாலையில் குறிச்சி தெற்கு பகுதி சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஏழை எளியோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. தெற்கு பகுதி பொறுப்பாளர் நிசார் அகமது தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கோவை கிழக்கு மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் குறிச்சி பிரபாகரன் கலந்து கொண்டு முன்னாள் முதல்வர் கருணாநிதியின் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செய்தார். மேலும் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டது. நிகழ்வில் குறிச்சி தெற்கு பகுதி பொறுப்பாளர் இரா.கார்த்திகேயன் மற்றும் ஏராளமான தி.மு.க நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மதுரை: மதுரை மாவட்டம் சமயநல்லூரில் உள்ள சக்தி ஆஸ்ரமத்தில் உள்ள ஆதரவற்றவர்களுக்கு கலைஞர் கருணநிதியின் 3ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் அன்னதானம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மேற்கு ஒன்றிய செயலாளர் தனசேகரன் சமயநல்லூர் கிளை செயலாளர் ராஜ்குமார் ஒன்றிய பிரதிநிதி முருகேசன், ஊராட்சிமன்றத் துணைத் தலைவர் பவித்ரா மாயாண்டி டிஎனேஸ்டிசி-தொழிலாளர்முன்னேற்ற சங்க நகர் கிளை பொருளாளர் கார்த்திகை செல்வன், செல்வராஜ் இளைஞரணி முத்து கார்த்தி கலைச்செல்வன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

HELLO Mirror MADRAS
hellomadrasdaily@gmail.com
R.DIS No: 60/2021
Daily Morning Newspaper
The Truth

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Tuesday, August 10, 2021 | Rs.2/- | ISSUE - 27

Public and Private partnership in skilling and employment

New Delhi, August 10 2021: Public Private Partnership play an important role in the skilling and employment.

The Ministry of Skill Development and Entrepreneurship is implementing its flagship scheme Pradhan Mantri Kaushal VikasYojana (PMKVY) through National Skill Development Corporation (NSDC) which had been set up as a Public Private Partnership initiative. The Ministry, through the NSDC, has taken up multiple initiatives to connect with industries for partnership under the Skill India Mission. There are 2188 Training Partners participating in the skill initiatives of the NSDC and all of them are private enterprises. 36 Sector Skill Councils (SSCs) have been set up as Industry led bodies which help in training need analysis, curriculum development, rolling out of training and assessment and certification.

In addition, Directorate General of Training, MSDE has also signed Memorandum of Understanding (MoU) with National Association of Software Services Companies (NASSCOM), IBM India Pvt. Ltd and SAP India Private Limited for conducting courses under CSR initiative of these private companies.

The National Education Policy (NEP) 2020 emphasizes integration between vocational and academic streams in all schools and higher education institutions in a phased manner. As per the said policy, vocational education will start in school from the 6th grade and will include internship. The Ministry of Skill Development and Entrepreneurship in collaboration with Ministry of Education has already initiated a pilot project on Hub and Spoke model. In Hub and Spoke model, Industrial Training Institutes (ITI)/ Pradhan Mantri Kaushal Kendras (PMKK) will be leveraged as hub of vocational education and training (VET); schools will access the skill training from this hub as individual spokes. With this synergy, the school students would be exposed to the wide range of possibilities available in the world of work in their respective fields and learn on latest technologies available in the ITIs. The project aims to ensure that every young adult in 6 to 19 years of age cohort completes either 12 year of schooling with at least one certification of level 2 to 4 National Skill Qualification Framework (NSQF) certificate or 10 years of schooling & certification with 2 years of ITI programme. Currently, the Program is envisaged in 4 States viz; (i) Chhattisgarh (ii) Madhya Pradesh (iii) Odisha and (iv) West Bengal. These State Governments have identified 2 districts and a hub ITI in each district in their respective States. Mapping of spoke schools is being done by the State Governments concerned.

Further, under the aegis of the MSDE, NSDC and its SSCs are facilitating the Ministry of Education for the implementation of the Samagra Shiksha scheme in 12,332 schools across 31 States and Union Territories (UTs), offering 125 job role-aligned courses across 21 Sectors, as in 2020-21. Under this initiative, more than 13 Lakh+ students are reportedly (by Ministry of Education) enrolled in 2020-21 academic year.

In addition, Ministry through NSDC is supporting University Grant Commission for three schemes namely Community College, Bachelor of Vocational course (BVOC) & Deen Dayal Upadhyaya Kaushal Kendras (DDUKK) which are being introduced in different colleges and universities. Sector Skill Councils are supporting the colleges/ universities to align their curriculum as per the NSQF approved Qualification pack and conduct the Skill Component assessment and certification.

The information was given by the Union Minister of Skill Development and Entrepreneurship, Shri Dharmendra Pradhan in a written reply in the Lok Sabha today.

Vice President Venkaiah Naidu and Speaker, Lok Sabha Om Birla chair event to sensitise Parliamentarians on India's efforts to eliminate TB

New Delhi, August 10 2021: Vice President of India and Chairman of Rajya Sabha Shri Venkaiah Naidu along with Speaker of Lok Sabha Shri Om Birla chaired an event today to sensitise Parliamentarians on the country's efforts to eliminate TB. Shri Mansukh Mandaviya, Union Minister for Health and Family Welfare and Dr. Bharati Pravin Pawar, Union Minister of State for Health and Family Welfare apprised the audience on the situation of Tuberculosis in the country and explained the need to rapidly eliminate the disease by 2025, as has been envisioned by Prime Minister Shri Narendra Modi in 2018.

Thanking the parliamentarians for being present at this sensitization exercise, the Vice President stated that "coordination at the central, state, district and local levels would help in making this a people's movement and would expedite our efforts in eliminating TB by 2025." Significant progress has been achieved since independence on this front and several others due to increasing penetration of healthcare systems across the country. For e.g. 63 million lives have been saved since 2000 through TB diagnosis and treatments, he added. He urged the members to set a goal in their constituencies for proper planning and execution of govt programs and help in eliminating TB. A pledge was taken by Parliamentarians for a TB Mukt Bharat.

Lok Sabha Speaker Shri Om Birla, calling for a collective action against TB, emphasized the crucial role played by the Parliament in disseminating the message in a country full of diversity. He said that it is responsibility of the people's representatives to ensure that their constituencies have constant identification and monitoring of the TB patients, look after the needs of patients during and post treatment. For smooth governance and health administration, parliamentarians would be provided with all necessary data related to TB and any assistance needed from the government, he added.

In his address, Shri Mansukh Mandaviya noted, "Prime Minister Shri Narendra Modi ji played a huge role in moulding thinking of the country towards making health a 'comprehensive' subject by linking it with development." Giving examples of programmes targeting malnutrition and those aimed at promoting cleanliness run by line ministries, he said that all these programmes ultimately improve the social determinants of health

thereby improving the living standards of India's population. He exemplified the model in the country's efforts to eliminate TB which requires nutritional support and wide social awareness. He highlighted the increased budgetary provisions that aim to provide holistic health to India's citizens.

The Union Health Minister underscored that a staggering 65% of TB cases are in the age group 15-45 which is the most economically productive population segment. This coupled with the fact that 58% of TB cases are in rural areas translates to entire families being excluded from upward mobility due to Tuberculosis. He thus asked all the MPS to proactively engage in sensitizing citizens about Tuberculosis and its treatment in the events they organise and attend.

Dr. Bharati Pawar spoke on the difficulties in the journey towards TB elimination with the onset of COVID-19: "Globally, 2020 witnessed a sweeping COVID-19 pandemic devastate lives, economies, health systems and health programmes across the world with record-breaking speed. In just a few months, the pandemic has reversed years of progress made in the fight against Tuberculosis. The onset of the pandemic in March 2020 triggered lockdowns, restrictions in movement, repurposing of available health system resources, infrastructure, diagnostics, treatment centers and manpower to fight Covid-19, disrupted ongoing TB elimination efforts and services all over the country." She informed her colleagues in Parliament on the steps being taken by the Ministry to rapidly make up for this interruption in the elimination of TB. She also suggested the effective sharing of collective responsibility with States in tackling the social determinants of TB for better and rapid health outcomes.

Union Health Secretary Shri Rajesh Bhushan, Shri Utpal Kumar Singh, Secretary General, Lok Sabha and Ms. Arti Ahuja, Additional Secretary (Health) were also present.

50 crore vaccine doses a huge confidence booster for Tourism: G.Kishan Reddy

New Delhi, August 10 2021: The Minister for Tourism, Culture, and Development of North Eastern Region (DoNER) , Shri G Kishan Reddy has said that the Covid 19 vaccination crossing the landmark of 50 crore doses would serve as a huge confidence booster for Tourism. The Union Minister has said that vaccination plays and important role towards the revival of tourism. "The universal vaccination programmme will not only help the tourism industry to bounce back but increase the confidence of foreign tourists and hence support domestic tourism recovery", he added. Mr Reddy urged all the citizens and the tourism stakeholders to cooperate and come forward for vaccination so that they can be protected from the virus. However, he also stressed that we all must follow the protocols recommended by the Ministry of Health including social distancing norms, the wearing face masks and appropriate distancing.

The Union Minister also attributed the fast pace of vaccination to several proactive steps taken under the leadership of the Prime Minister. He added "Today, the results which we are witnessing are primarily due to the relentless efforts of our government under the visionary leadership of Prime Minister. We made the government work as an incubator for vaccine development and hence could vaccinate more people daily than any other country in the world".

The Union Minister also has commended the work done by the front-line workers and other medical staff. "I would like to salute all Front-Line Health workers that include Doctors, Nurses, Municipal workers, ASHA workers, and Government Servants.

They have been the 'Suraksha Kavacchh' against COVID-19 even before the vaccination program rolled out", the minister added.

The Minister has said that the speed at which the vaccine drive has been rolled out since the new phase of universalization of COVID 19 vaccination commenced from 21st June 2021 has generated a sense of security among the people, "It took us only 20 days to administer the last 10 crore vaccines and this shows the agility with which the government is working towards universal vaccination"

Initiatives taken by the Government to promote girls and women across the country

New Delhi, August 10 2021: As per All India Survey on Higher Education (AISHE), the overall enrolment of female students in higher education has been consistently increasing over the years. Table below gives female, male and total enrolment in higher education between 2015-16 and 2019-20. The enrolment of females has increased by about 18% from 1.60 crore in 2015-16 to 1.89 crore in 2019-20.

The steps taken/being taken by the Government to promote education among girls and women are as follows:

Issuing of new UGC regulation for Open and Distance Learning that allows entry of reputed institutions to offer education on the distance mode.

Use of ICT technology-SWAYAM portal to take the best teaching resources to all, including the most disadvantaged.

Opening of more centrally funded institutions.

Encouraging opening of institutions by State Governments through the Rashtriya Uchchatar Shiksha Abhiyan (RUSA) which aims to achieve equity, access and excellence in higher education. The scheme supports components such as upgrading autonomous colleges to universities, clustering colleges to establish a university, setting up of new professional colleges in un-served and underserved areas as well as providing infrastructure grants to universities and colleges to scale up capacity.

More scholarship programmes to supplement the cost of education.

Additionally, as per the recommendations of National Education Policy (NEP), 2020, the following steps are being initiated by the Government to ensure equitable access to the highest quality of education for all learners, especially women, regardless of social or economic background:

A Gender Inclusion Fund will be constituted by Government of India to provide quality and equitable education to all girls. The fund will focus on ensuring 100% enrolment of girls in Schooling and a record participation rate in higher education.

Free hostel facilities will be made available for all women.

New multi-disciplinary HEIs (including those specially for women) will be opened in or near every district.

Special scholarships for women/transgender/ divyang will be introduced.

The information was given by the Union Minister of Education, Shri Dharmendra Pradhan in a written reply in the Lok Sabha today.

Chennai, August 10 2021: On 5th August 2021, Rtn Usharani Kannan, chairman Peace Building and Conflict Prevention of District 3232 was the chief guest for inaugurating the Breast Feeding Awareness month at Kasturba Gandhi Hospital for women and children in Triplicane. On behalf of ROTARY CLUB OF CHENNAI INFOCITY 100 kits containing nutritious supplements were distributed, for breast feeding new mothers. Thanks to the Director of the hospital, Dr Uma Maheshwaran, head and deputy head of the Paediatric department of the hospital. Rtn Usha spoke on the importance of mother's breast feeding their babies as it alone can keep them healthy and Giving good health to children is more important than giving them wealth.

Chennai, August 10 2021: Rotary Club Of Chennai Infocity had their Installation PHF. Rtn R.Ramalingam was Installed as the 12th President, R. Vijayan as Secretary & G.Archana As the Treasurer for 2021-2022.Dist Governor J. Sridhar and Asst Dist Governor Sai Krishna & Many other Past District Governors & Dist Secretary & Various Club Presidents Attended the Installation and Wished the new Team. President Thanked the all Senior Members of the Club P. Sridhar, Raghunathan, Nandini, Usha, Gayatri & Venkatesan who helped him & the Club to Grow to Next Level. DG also praised P.Sridhars activities in the Rotary for more than 2 Decades.

Owned & Pubilshed by R.SATHYANARAYANAN from No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 26, and printed by him at chennai offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-2, Editor: R.SATHYANARAYANAN, Email: hellomadrasdaily@gmail.com. Contact: 8148231942. Subject to Chennai Court Jurisdiction